தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர், தேதி: 24-8-2015
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் பல்கலை மாணவர்களுடன் அமெரிக்க தூதர் சந்திப்பு

இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் ரிச்சர்டு வர்மா தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு இன்று (24-8-2015) வருகை தந்தார். பல்கலைக்கழகத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அவரது உரையில் நாட்டின் எதிர்காலத்திற்கு உவப்பான விவசாயத்தில் அது சம்பந்தமான தொழில் வாய்ப்புகளை உருவாக்கி சாதாரண மக்களின் வாழ்வாதாரத்திற்கு வித்திடும் இந்த படிப்பை தேர்ந்தெடுத்து படிப்பதற்கு பாராட்டினார்.

2050 ம் ஆண்டு நமது 9.1 பில்லியன் மக்களுக்குத் தேவையான உணவு உற்பத்தியினை எட்ட தற்போது உள்ள அளவினை விட 70 சதவீத அளவுக்கு அதிகப்படுத்த வேண்டும்.

இந்த அளவுக்கு உற்பத்தியினை அதிகப்படுத்த கணிசமான அளவுக்கு வேளாண் கல்வி மற்றும் ஆராய்ச்சியில் நிதி முதலீடு செய்யப்பட வேண்டும் என்றும், புதிய தொழில்நுட்பங்கள் மூலம் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தவும் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்களின் மூலம் சேமிப்பை ஊக்கப்படுத்தவும் மக்கள் மத்தியில் மண் மற்றும் நீரினை தொடர்ந்து வளங்குன்றா வகையில் பயன்படுத்த ஊக்குவிக்க வேண்டும் என்றார்.

விவசாய மாணவர்களாகிய நீங்கள், கிராமப்புற வளர்ச்சிக்கும் அதன் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உறுதுணையாக இருக்க என்ன முயற்சி எடுப்பீர்கள் என கேள்வி எழுப்பினார். மேலும், உள்ளூர் உற்பத்தியாகும் பொருட்களை உலக அளவில் எடுத்துக் செல்ல தக்க உத்திகளைக் குறித்து ஆராய வேண்டும் என்றும் கூறினார்.

இதுபோன்ற சாதனைகளை முன்னதாகவே முனைவர் எம்.எஸ்.சுவாமிநாதன் அவர்கள் போன்ற விஞ்ஞானிகள் படைத்துள்ளனர். அதனை, முன் உதாரணமாக கொண்டு என்றும் உத்வேகத்துடன் விவசாய மறுமலர்ச்சியினை நோக்கி நாம் உழைக்க வேண்டும்.

முன்னதாகவே, அமெரிக்க - இந்திய – ஆப்பிரிக்க கூட்டு ஒப்பந்த அடிப்படையில் வேளாண் கென்யா, மாலாவி மற்றும் ஹைபீரியா போன்ற நாடுகளிலிருந்து வேளாண் வல்லுநர்களை வரவழைத்து புதிய தொழில்நுட்பங்களான பயிற்சியினை அளித்து உணவுப் பாதுகாப்புக்கு வழிவகை செய்துள்ளோம் என்றும் கூறினார். நாம் ஒரு குழுவாக இணைந்து உழைக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். முன்னதாகவே, ஆபிரகாம் லிங்கன் அவர்கள் காலத்திலேயே அமெரிக்க வேளாண் அபிவிருத்தி முகாம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் வேளாண் பல்கலைக்கழகங்களை நாடு முழுவதும் ஏற்படுத்தினார். அதனை போலவே இந்தியாவிலும் வேளாண் பல்கலைக்கழகங்கள் தோன்றின. அக்காலம்தொட்டு, அமெரிக்கவிற்கும் வேளாண் பல்கலைக்கழகத்திற்கும் இடையேயான தொடர்பு தொடர்ந்து பலப்படுத்தப்பட்டு வருகிறது என்றும் கூறினார்.

அதுமட்டுமல்லாமல், விவசாய உற்பத்தியில் முன்னனி நாடுகளான அமெரிக்கா மற்றும் இந்திய நாடுகள் உற்பத்தியை மட்டும் கணக்கில் கொள்ளாமல் உலக அளவில் சந்தைப்படுத்தவும் ஏனைய உலக நாடுகளுக்கு உணவு பாதுகாப்பினை உறுதிப்படுத்தவும் நாம் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். மேலும், புதிய தொழில்நுட்பங்களான உயர் தொழில்நுட்பங்களையும் மற்றும் மரபணு மாற்றப்பட்ட தொழில்நுட்பங்களையும் நம் காலத்தின் தேவைக்கேற்ப பயன்படுத்த வேண்டும் என்றும் கூறினார்.

அமெரிக்கா இந்திய விவசாயத்திற்கு ஏற்ற திட்டங்களை முதலீடு செய்யவும் புத்தாக்க ஆராய்ச்சி மேம்பாட்டிற்கும் கிராமப்புற பொருளாதார முன்னேற்றத்திற்கும் அதனை உலக நாடுகளுடன் இணைக்க எல்லா வழிவகைகளும் ஆராய்ச்சிக்கு உதவி அளிக்கும் என்றார்.

இறுதியாக, நமது குறிக்கோளான உலக மக்கள் அனைவருக்கும் குழந்தைகள், தாய்மார்கள் மற்றும் பெண்களுக்கான பிரத்யேகமான தேவைகளை கருத்தில் கொண்டு உணவு மட்டுமல்லாமல் சத்துக்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு அவைகளின் தேவைகளை பூர்த்தி செய்து ஊட்டச்சத்து குறைபாடில்லாத சமூகத்தை உருவாக்க வழிவகை செய்ய வேண்டும்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்